பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 26 புதன்கிழமை 13.10.2021 கதிர் 342

இனி அது ரகசியம் அல்ல!

சுமார் ஒன்றரை ஆண்டுக ளுக்கு முன்னர் பதவியேற்ற முன் னாள் வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ், அந்தப் பதவி ஏற்பு சம யத்தில் ஒரு விடயத்தைக் கூறியி ருந்தார். அது இப்போதும் நிஜ மாகியிருக்கின்றது.

வடக்கு மாகாணத்திற்கு ☞2

## மேலும் 23 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ☞2

## 13 ஐ முழுமையாக நிறைவேற்றிய பின்பே மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்!

### அரசிடம் வலியுறுத்துகின்றது கூட்டமைப்பின் பங்காளி ரெலோ

எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தல் எப்போது நடத் தப்படுவதாக இருந்தாலும் அர சமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக நிறை வேற்றப்பட வேண்டும் எனவும், அதன்பின்னரே மாகாண சபைத் தேர்தல் நடத்துவது அர்த்தமுள் ளதாக அமையும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சியான ரெலோ சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட் சியின் ஊடகப் பேச்சாளர் குரு சாமி சுரேந்திரன் நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:-

நடப்பிலிருக்கும் ☞2



## அலரி மாளிகையில் நவராத்திரி விழா!

### சுப்பிரமணியன் சுவாமி பங்கேற்பு



அலரி மாளிகையில் நடை பெற்ற நவராத்திரி விழாவில் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினரு மான சுப்பிரமணியன் சுவாமி கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது. இதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ☞11

# பஞ்சம் ஏற்பட இடமளியோம்

## நிதி அமைச்சர் பஸில் உறுதி

அரசு என்ற ரீதியில் நாட்டில் எந்தவிதத் திலும் பஞ்சம் ஏற்பட இடமளிக்கமாட்டோம் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

நாட்டின் உணவு பாதுகாப்பு தொடர்பில் விவசாய அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைச்சுக்களின் பிரதி நிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்து ரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். ☞2



## வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு!

### குவாட் அமைப்பிடம் கோரிக்கை



(இ.கலையமுதன்)

ஐக்கிய நாடுகள் சபை வடக்கு, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென அமெ ரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளை உள்ளடக் கிய குவாட் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரி வித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இது தொடர்பான கடிதம் ஏற் கனவே இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலை யில், ஏனைய மூன்று நாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக் கும், அதன் நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும் அந்த கடிதம் பார்வைக்காக அனுப்பப்பட்டுள் ளது.

அனுப்பப்பட்ட அந்த கடிதத் திலே, 1987 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத் தின் விளைவாகிய, நடைமுறை யிலுள்ள மாகாண ☞11

## நேற்று தொற்று 671

இலங்கையில் நேற்று 671 பேர் கொரோனா வைரஸ் தொற் றுடன் அடையாளம் காணப்பட் டுள் ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோ னாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயி ரத்து 735 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்ட ☞11

## கிழக்கில் முதல்வர் வேட்பாளராக மீண்டும் பிள்ளையான் களத்தில்?



தமிழ் மக்கள் விடுதலைப்புலி கள் கட்சியின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான சிவ நேசதுரை சந்திரகாந்தன் (பிள் ளையான்) எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கக் கூடும் என அறியமுடிகின்றது.

'மொட்டு' கூட்டணியின் சார் பில் முதலமைச்சர் வேட்பாளரா கவே அவர் களமிறக்கப்படலாம் எனவும், இதற்காக நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை அவர் துறப்பார் ☞11

## மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள அரசு தயார்!

### அமைச்சர் நாமல் தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு எமது கட்சி தயாராகவே இருக்கின்றது என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய வெளிவிவகார செய லாளரின் இலங்கை பயணத் துக்கும், மாகாண சபைத் தேர் தலுக்கும் இடையில் ☞11

## யாழ்ப்பாணத்தில் கனடாத் தூதுவர்!



(இ.கலையமுதன்)

இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மெக்கின்னன் யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆளுநராக வரும் எவரும் இங்கிருந்து நிம்மதியாக – சந்தோஷமாக – பதவியை முடித்துக் கொண்டு போவதில்லை என்ற யதார்த்தத்தை அம்மணி அப்போது எடுத்துரைத்தார். அவருக்காவது இந்த முறைமையை மாற்றியமைக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் அதுவும் நடக்கவில்லை.

வடக்கு ஆளுநராக பதவியில் இருந்த அவருக்கே தமது இடத்துக்கு ஒரு புதியவர் நியமிக்கப்பட்டு விட்டார், தாம் மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு இனிப் புறப்பட வேண்டியதுதான் என்பது புதிய ஆளுநர் நியமனம் பற்றிய செய்தியை காலைக்கதிரின் மாலை இதழ் முதன் முதலில் வெளியிட்டபோது அதைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று.

இதனால் மனக் கசப்புடனேயே பதவி இழந்து அவர் வெளியேறுகின்றார். புதியவர் பெரும்பாலும் அடுத்த வார முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபை உருவாக்கத்துடன் வந்த வடபகுதி முன்னாள் கட்டளைத் தளபதி சந்திரசிறி பலரின் கடும் முயற்சியால் அதிலிருந்து அகற்றப்பட்டார். அந்தப் பதவியைப் பிடிப்பதற்கு நேற்று வரை அவர் முன்னெடுத்த தீவிர முயற்சிகள் பலனளிக்கவேயில்லை.

முன்னால் தோன்றுபவர்கள் எல்லோரையும் தமது நளின – குத்தல் – கதைகளால் தூக்கியடிக்கும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரனின் நையாண்டித்தனமான கடிதம் – ஒரு சொல்லாடல் – பிடிக்காமல் அல்லது அது தமது மனதைச் சுட்டதால், தாமே பதவி விலகிச் சென்றார் ஆளுநர் பலிகக்கார. வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் சகல தரப்புகளினாலும் மதிக்கப்பட்ட ஒருவரின் சேவை இப்படி மன நோவுடன் முறிந்து போனது.

ரெஜினோல்ட் கூரே, சுரேன் ராகவன் போன்றோரின் ஆளுநர் பதவிகள் ஆட்சி மாற்றங்களினால் பறிக்கப்பட்டன. மீண்டும் அதே பதவியைப் பெற்றுக் கொள்ள அவர்கள் எடுத்த முயற்சியும் பலிக்கவில்லை.

பி.எஸ்.எம். சார்ள்ஸின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜாவின் பதவிக் காலமாவது இணக்கமான – புரிந்துணர்வான – சந்தோஷம் மிக்க – உணர்வுகளுடன் பூர்த்தியாகின்றதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

★ ★ ★

அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகளை, அப்போதைய சிறைத் துறை அமைச்சர் லொஹான் ரத்வத்தை தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டிய விடயத்தில் தமிழ்க் கைதிகளின் பக்கத்துத் தகவல் எந்த 'சென்ஸார்' தணிக்கைகளுமின்றி அப்படியே வெளியாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ்க் கைதிகளுக்கு நேர்ந்த அவலம் பற்றிய விவகாரம் வெளியே தகவலாக – செய்தியாக – வெளிவந்த போதிலும், கைதிகள் பக்கத்துக் கதைகள் சுயாதீனமக வெளியே வரவேயில்லை. கைதிகள் தொடர்ந்தும் சிறைக்குள் இருப்பதாலும், அவர்களைப் பிறர் சந்திக்கும் போது பக்கத்தில் எந்நேரமும் சிறை அதிகாரிகள் உடன் இருப்பதாலும் உண்மைகள் அப்படியே வெளியே வருவதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாக இருந்தன.

எனினும் கைதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவைப் பரிசீலனைக்கு எடுத்த உயர் நீதிமன்றம், அந்தக் கைதிகளை அவர்களின் சட்டத்தரணிகள், பிறர் எவரின் பிரசன்னமுமின்றி தனித்துச் சந்தித்து, விடயங்களைக் கேட்டறிந்து, புதிய சத்தியக் கடதாசிகளை சமர்ப்பிக்கவும், அவற்றின் அடிப்படையில் திருத்தப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை வழக்கில் அணைக்கவும் அனுமதிது உத்தரவிட்டது.

அதன்படி ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியின் வழிகாட்டலில் சட்டத்தரணி கேசவன் சயந்தன், சமாதான நீதிவான் ஒருவருடன் அநுராதபுரம் சிறைக்குச் சென்று தமிழ்க் கைதிகளைத் தனியாகச் சந்தித்து, அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட சுயாதீன சந்தியப்பிரமாணப் பத்திரங்களையும், திருத்தப்பட்ட வழக்கு மனுவையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

அந்தத் திருத்தப்பட்ட மனுவில், கைதிகள் எவ்வாறு அச்சுறுத்தப்பட்டார்கள் என்ற விடயம் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. அதன் சாராம்சம் இதுதான்:–

"2029 செப்டம்பர் 12ஆம் திகதி மாலை 6.05 மணி போல பத்துக் கைதிகளும் சிறை மத்தியில் உள்ள மைதானத்தில் ஒன்று கூடுமாறு பணிக்கப்பட்டோம். அமைச்சர் லொஹான் ரத்வத்தையும், அவரின் செயலாளர் போல் காட்சியளித்த ஒருவரும், அவரின் பாதுகாப்பு அணியினரும், அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் எம்.எச்.ஆர்.அஜித்தும் அங்கு நின்றனர்.

அரசியல் கைதிகள் பத்து பேரையும் அரைவட்டத்தில் தமக்கு முன்னால் அணிவகுத்து முழங்காலில் நிற்குமாறு உத்தரவிட்ட அமைச்சர், அனைவரையும் அச்சுறுத்தும் தொனியில் பேசினார். அந்தச் சமயத்தில் அவர் போதையில் இருந்தார். இந்தக் கைதிகளை (எங்களை) விடுதலை செய்வதற்கு அல்லது சுட்டுக் கொல்வதற்கு ஜனாதிபதி தமக்கு முழு அதிகாரமும் தந்திருக்கின்றார் என அவர் மிரட்டினார். ஒவ்வொரு கைதியையும் நோக்கி அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதை ஒப்புவிக்குமாறு அவர் சிங்களத்தில் கேள்வி யெழுப்பி அச்சுறுத்தினார். வரிசையில் முதலாவதாக இருந்த கைதி தமக்குச் சிங்களம் தெரியாது என்று சொன்னதும் அதனால் சீற்றமுற்ற அமைச்சர் மேலும் சத்தமிட்டு மிரட்டத் தொடங்கினார். அச்சமயம் சிறைச்சாலை அத்தியட்சகர் தலையிட்டு மொழிபெயர்ப்பு செய்தார். ஒவ்வொருவரிடமும் அதே போன்று தொடர்ந்து கேள்விகளைக் கேட்ட அமைச்சர், பின்னர் முதல் இரண்டு கைதிகளையும் அங்கிருக்கும்படியும் ஏனையோரை அங்கிருந்து போகுமாறும் சத்தமிட்டார். பின்னர் தன்னுடைய கைத்துப்பாக்கியை 'லோட்' செய்து முதலாவது கைதியான பூபாலசிங்கம் சூரியபாலனின் தலையில் அதனை வைத்து அவரைச் சுட்டுக் கொல்லப் போகிறார் எனப் போதை வெறியில் மிரட்டினார். அச்சமயம் அங்கிருந்த சிறைச்சாலை அத்தியட்சகரும், ஏனைய சிறை அதிகாரிகளும், பாதுகாப்புத் தரப்பினரும் அமைச்சரை ஒருவாறு சமாளித்து அங்கிருந்து அகற்றினர். இந்தச் சம்பவம் எங்கள் எல்லோருக்கும் பெரும் அச்சத்தைத் தந்திருக்கின்றது. வெலிக்கடை சிறையில் 1983 ஜூலையில் ஐம்பதுக்கும் அதிகமான தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டமை போல, பின்னர் பிந்துனுவெவவில் கைதிகள் கொல்லப்பட்டமை மாதிரி, அநுராதபுரம் சிறையில் எங்களுக்கும் நேரலாம் என நாங்கள் அஞ்சுகிறோம். மார்ச் 2020 தொடக்கம் ஜூன் 2020 வரை யாழ்ப்பாணம் சிறையில் எங்களை வைத்திருந்தமை போல எங்களை வட மாகாண சிறை ஒன்றுக்கு மாற்றுமாறு நாங்கள் வேண்டுகிறோம். எங்களைப் பிணையில் விடவும் அல்லது முழுமையாக விடுவிக்கவும் உத்தரவிடுமாறு வேண்டுகிறோம்." – இந்தச் சாரப்பட கைதிகள் புதிய சத்தியக் கடதாசியில் தெரிவித்திருக்கின்றனர் என அறிய வந்தது.

இந்த வழக்கு பெரும்பாலும் அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்குத் தலையிடி தருவதாக இருக்கும் என்பதுதான் என் அனுமானம். போதை தலைக்கேறியமையால் வந்த வினை இது.

– மின்னல் –

---

## 13 ஐ முழுமையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

13ஆவது திருத்தச் சட்டம் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக இருக்கின்றது. கடந்த காலங்களில் மாகாண சபையின் பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை எங்களுடைய அரசியல் தீர்வாக நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இருக்கக்கூடிய அரசியல் அதிகாரங்களை இழப்பது என்பது சாணக்கியமானதல்ல.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையில் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட ஒரு மாகாண சபை முறைமையை நாங்கள் ஏற்பதா அல்லது முற்றுமுழுதாக 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்ட மாகாண சபையை ஏற்பதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கான சரியான நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் எட்ட வேண்டியது மாத்திரமல்ல வலியுறுத்த வேண்டியதும் கட்டாயமானதாகும்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் தமிழர் அரசியல் தீர்வில் இந்தியாவின் நிலைப்பாடு சம்பந்தமான தீர்க்கமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவது, அதன் அடிப்படையிலான மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது, அந்தக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த நின்று கோருவது என்பனவே அவை. இதனூடாக இதை தாண்டிய அரசியல் தீர்வை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தியா தொடர்ந்தும் இதை வலியுறுத்தி வந்தாலும் தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் கோரவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை தமிழர் தரப்பு சரியாகப் புரிந்துகொண்டதோ, இல்லையோ இலங்கை அரசு தந்திரமாக கையாள முற்பட்டுள்ளது.

இந்தநிலையில், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளின் சுயாதீனத்தை உறுதிப்படுத்த அரசமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றிய நீதி மன்ற தீர்ப்புகளும் தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளும் உள்ளன.

தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து தேர்தல் வியூகங்களை வகுப்பதற்கு முன்னர், தற்போது அரசமைப்பில் இருக்கும் குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்கு தமிழர் தரப்பு ஒருமித்த கோரிக்கையை சம்பந்தப்பட்ட தரப்புகளான இந்திய அரசிடமும் இலங்கை அரசிடமும் முன்வைக்க வேண்டியது கட்டாயமாக உள்ளது.

இதை நாம் தொடர்ந்தும் பல காலமாக வலியுறுத்தி வந்துள்ளோம். இன்று வரலாறு அந்தப் புள்ளியில் தமிழினத்தை கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. விமர்சனங்களை கடந்து ஆக்கபூர்வமாக ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளைக் கோருகின்றோம் – என்றுள்ளது.

---

## மேலும் 23 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 12 பெண்களும் அடங்குகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் குறித்த சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களத்தால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 377 ஆக அதிகரித்துள்ளது.

---

## பஞ்சம் ஏற்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் முழு வருடத்துக்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் கூறினார்.

அந்தந்த செயற்திட்டங்களுக்காகக் கட்டம் கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**லாண்ட்மாஸ்டர் விற்பனைக்கு**

ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட K8 - NITIA model லாண்ட்மாஸ்டர் Cobota latest version, Not registered with rota - weeler விற்பனைக்கு உண்டு.
விலை 400,000/=
நேரடியாகப் பார்வையிட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**0767403814**



காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணசபை அழிவுக்கு கூட்டமைப்பே காரணம்!

## பிள்ளையான் சாட்டை



மாகாணசபைகள் இன்று மூன்றரை வருடங்களாக அழிந்துபோய் இருப்பதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் பிரதமரின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படும் உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் என்னும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கு கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை, தென் எருவில், பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர் காலம் வீடமைப்பு திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதல்கட்ட நிதிவழங்கும் நடவடிக்கை நடைபெற்றது.

மண்முனை, தென் எருவில் பற்றுக் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்னம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாகத் தெரிவுசெய் யப்பட்ட 33 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபா நிதி இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

எனது முதலாவது நாடாளுமன்ற உரையின்போது அதிகார பகிர்வு விடயத்தில் மாகாணசபை முறைமை மட்டுமே எமது கைகளில் உள்ளது, அதனை பலப்படுத்தியெடுக்க வேண்டும் என்று கோரியிருந்தேன்.

2017 ஆம் ஆண்டு மாகாணசபை முறைமையில் வந்த சட்டத்தை சரியாக நடத்தி முடித்திருந்தால் நல்லாட்சி அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இழைத்த தவறு தான் மாகாண சபை தேர்தல் தாமதமடைந் ததற்குக் காரணமாகும். ஐம்பதுக்குஐம்பது, வட்டாரமுறை என்றெல்லாம் கொண்டுவந்து குழப்பியடித்து எல்லாவற்றையும் குழப்பிவிட்டனர். வடக்கில் விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபோது மீண்டும் அவர் போட்டியிட்டு முதலமைச்சராக வந்து விடுவார் என்ற பயத்தில் சுமந்திரன் மாகாண சபைத் தேர்தலை தடுத்திருந்தார்.

சட்டமூலம் வந்தபோதுகூட தமிழில் அதனை சமர்ப்பிக்கவில்லை என்று கூறியவர் சுமந்திரன். ஆகக்கூடுதலாக ஆங்கில மொழியை பயன்படுத்துபவரும் சுமந்திரன் தான். ஆகையால் அவரது உள்ளக அரசியல் காரணமாக அவர் முடிவெடுக்கக் கூடிய ஆட்சியில் இருந்த போது கூட மாகாணசபை முறைமை மூன்று வருடங்களாக அழிந்து போய் கிடப்பதற்கு பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும்.

ஆனால் தற்போதிருக்கின்ற அரசாங்கம் வந்ததிலிருந்து தேர்தலை நடத்தவேண்டுமென்ற முன்மொழிவை வைத்துக்கொண்டேயிருந்தது. அது சாத்தியமாகக்கூடிய சூழல் உருவாகியிருக்கின்றது. அடுத்த வருடம் மூன்றாம் மாதமளவில் தேர்தல் அறிவிப்பை அரசாங்கம் செய்திருக்கின்றது. கிழக்கு மாகாணம் தனித்துவமான மாகாணமாகும். கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் தங்கள் தலைமையைத்தீர்மானிக்கின்றதேர்தலாக அதை நாங்கள் பார்க்க வேண்டும். அந்தத் தேர்தலில் நல்லதொரு முதலமைச்சரை மக்கள் தேர்வு செய்து இந்த மாகாணத்தை கட்டியெழுப்ப அவருடன் இணைந்து உழைக்க வேண்டும்.

அதிகார விடயத்திலும் மாகாணசபை முறைமையிலிருந்து தான் ஆரம்பிக்க முடியுமென்று நாங்கள் 2007ஆம் ஆண்டிலிருந்தே சொல்லி வந்திருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்கள் கொள்கையின் பிரகாரமும் அவர்களின் பிழைகளை ஏற்றுக்கொண்டும் யதார்த்தத்தை உணர்ந்து மாகாண சபை முறைமையில் இறங்கியிருப்பதும் நேற்று அவர்கள் மாகாண சபைத் தேர்தலுக்கான போட்டியாளர்களை பேசி தீர்மானித்திருக்கின்ற செய்திகளை அறிந்து நான் மனதிற்குள் சிரித்துக் கொண்டேன். 2008 ஆம் ஆண்டு தேர்தலில் எங்களால் போட்டியிட முடியாது எனவும் வடக்கு கிழக்கு இணையாத மாகாணத்தில் போட்டியிட முடியாதென்று பேசியவர்கள் இன்று தேர்தல் அறிவிப்பு வந்தவுடனேயே போட்டியாளர்களைத் தெரிவு செய்து களத்தில் குதித்திருக்கின்ற நிலைமையை பார்த்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர்காலத்தில் சிறந்த ஒரு முதலமைச்சரை வடக்கு கிழக்கு பெற்று சிறப்பான அதிகாரத்தை நோக்கிய கிழக்கு மாகாணசபையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் பங்கெடுக்கும். - என்றார்.



# கந்தளாயில் விபத்து; பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவ இடத்திலேயே சாவு

## இருவர் படுகாயம்

கந்தளாய் - ரயில் கடவையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயணித்த கார் ஒன்று விபத்துக்குள்ளானதில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் காரின் சாரதியும் பொலிஸ் உத்தியோகத்தருமான மற்றொருவர் படுகாயங்களுடன் கந்தளாய் வைத்தியசாலையில் அதிதீவிர கிசிச்சைபிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மாத்தளை பகுதியைச் சேர்ந்த டி.எல்.சிறிசேன (வயது - 55) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். திருகோணமலையிலிருந்து கந்தளாய்க்குச் சென்றகார் ரயில்கடவையைக் கடக்க முற்பட்டபோதே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகவும் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரையிலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.



# மக்களின் எதிர்பார்ப்பை புறந்தள்ளி வெற்றிகரமாகப் பயணிக்க முடியாது

## அமைச்சர் வீரவன்ஸ தெரிவிப்பு

மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை புறந்தள்ளி செயற்பட்டால், வெற்றிகரமான பயணத்தை ஒருபோதும் மேற்கொள்ள முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கட்டுபெத்த பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இந்த இரண்டு வருட பயணத்தில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்தே பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் நாம் செய்த தவறுகள் என்ன, குறைபாடுகள் என்ன, எந்த இடத்தில் பிழை நேர்ந்தது என்பதை சரியாக ஆராய்ந்து பயணித்தால், அடுத்த மூன்று வருடங்களில் மக்களின் அபிப்பிராயத்தை மீண்டும் எம்மால் பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும்.

ஆனால், இந்தப் பயணத்தை நாம் உறுதியாக மேற்கொள்ள வேண்டும். மக்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் எமது பயணம் அமைந்திருக்க வேண்டும்.

இதனை நாம் தவற விட்டால், ஒருபோதும் எம்மால் எமது பயணத்தை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியாது.

மக்களின் வாழ்வாதாரச் சிக்கலைக் குறைத்து, தேசிய பாதுகாப்பை இன்னமும் பலப்படுத்த வேண்டும் என்பதையே மக்கள் எம்மிடம் எதிர்ப்பார்த்தார்கள்.

இந்த எதிர்பார்ப்பை நாம் விளையாட்டாக கருதக் கூடாது. அதனைப் புறந்தள்ளி செயற்படவும் கூடாது. - என்றார்.

# நாட்டை உங்களால் நிர்வகிக்க முடியாவிட்டால் தகுதியானவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்குக!

## அரசிடம் சஜித் கோரிக்கை



நாட்டைமுறையாக நிர்வகிக்க உங்களால் முடியாவிட்டால், தகுதி வாய்ந்த தரப்பிற்கு ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்து விட்டு, ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேறுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் -

மக்களுக்கு பொறுத்துக் கொள்ள முடியாதளவுக்கு, அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வடைந்துள்ளது.

சமையல் எரிவாயு, சீமெந்து, பால்மா உள்ளிட்ட பொருள்களின் விலையேற்றம், கொரோனா காலத்தில் மக்களைப் பெரிதும் பாதிப்படைய வைத்துள்ளது. இதனால், மக்களின்வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மூச்சு விடக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் ஊடாக இந்த அரசாங்கத்துக்கு பொருளாதாரத்தை முறையாகக்கையாள உரிய வேலைத் திட்டங்கள் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

அரசாங்கத்திடம் முறையான கொள்கைகள் இல்லை. மக்கள் தொடர்பாக இதுவரை இந்த அரசாங்கம் சிந்திக்கவும் இல்லை.

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட இந்த அரசாங்கத்தால், மக்களுக்கான நிவாரணங்களை வழங்க முடியாவிட்டால், வேலை செய்யக் கூடிய தரப்பிற்கு ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, வெளியேற வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்- எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மன்னாரில் எரிபொருள் அகழ்வு

மன்னார் வளைகுடாவில் கடல் படுக்கையின் கீழிருந்து மசகு எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்ந்தெடுப்பதற்கான சர்வதேச கேள்விப் பத்திரங்களை இலங்கை அரசு வரும் ஜனவரியில் கோரும் என்று இலங்கைப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில்ல தெரிவித்திருக்கின்றார்.

'எம்.2' என்று குறியீட்டு முறையில் குறிப்பிடப்படும் மன்னார் கடல் படுக்கையில் தலா பதினைந்து கிலோ மீற்றர் நீளமும், பதினைந்து கிலோ மீற்றர் அகலமும் கொண்ட மொத்தம் 873 துண்டங்களை குறிப்பிட்டு அவற்றில் எண்ணெய், எரிவாயு அகழ்வாய்வுக்கும், அவற்றை அகழ்ந்தெடுப்பதற்குமான பிரதேசங்களாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் அகழ்வுப் பணியில் ஈடுபட விரும்பும் கம்பனிகள், தரப்புகள் தமக்கு விருப்பமான இடங்களை இலகுவாக அடையாளம் கண்டு, கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவே இந்த 873 துண்டப் பிரதேசங்களும் தெளிவாக வரையறை செய்யப்பட்டு வர்த்தமானி மூலம் அவற்றின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றார் அமைச்சர் கம்மன்பில்ல.

இந்தத் துறையில் நிபுணத்துவமும், ஈடுபாடும், தகைமையும் கொண்ட – இருபதுக்கும் அதிகமான – சர்வதேச நிறுவனங்கள் இவ்விடயத்தை ஒட்டி சிரத்தை காட்டி வருகின்றன. அந்தத் தரப்புகள், கம்பனிகள் தத்தமக்கு விருப்பமுள்ள துண்டங்களை அடையாளப்படுத்தி, கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்து, இந்த அகழ்வுப் பணியில் ஈடுபடலாம் என்று வெகு 'ஸிம்பிளாக' அவர் கூறிவிட்டார்.

ஆனால், மன்னார், வளைகுடாப் படுக்கையில் எரிபொருள் அகழ்வுப் பணி என்பது வெறுமனே இலங்கையின் சொத்தை, இயற்கை மூலவளத்தை, இலங்கை தனக்குரிய நிதி மூலமாக மாற்றும் விடயம் மட்டுமன்றி, அதையும்தாண்டிபல உணர்வுபூர்வமான சிக்கல்கள் அதில் இருக்கின்றமையை அமைச்சர் மறந்து விடக்கூடாது.

வடக்குக் கடலில் முப்பதாயிரம் சதுரக் கிலோ மீற்றர் பிரதேசத்தில் ஒரு கோடி பரல் எண்ணெய் மூலவளம் இருப்பதாக முன்னர் அளவிடப்பட்டது.

ஆனால், இப்போது வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை குறித்தொதுக்கியுள்ள – ஒவ்வொன்றும் 15கி.மீற்றர் நீள, அகலமுடைய – 873 சதுரத் துண்டங்களிலும் மொத்தம் இருநூறு கோடி பரல் மசகு எண்ணெயும், ஒன்பது லட்சம் கோடி கன அடி இயற்கை எரிவாயுவும் பெறமுடியும் எனக் கணக்கிடப்படுகின்றது.

நல்லது. இது கடலுக்குக் கீழ் – கண்ணுக்குத் தெரியாமல் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை.

அதுவும், அயலில் இப்பிராந்தியத்தின் வல்லரசான இந்திய எல்லை. அதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – இந்தியாவுக்கு முரணான, அச்சுறுத்தலான (உதாரணம் – சீனா) தரப்புகளின் கம்பனிகளை இந்தியாவுக்கு மிக அருகில் கடல் படுக்கைகளில் சுயாதீன நடவடிக்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் அனுமதிப்பது வீணாக இந்தியாவை சீண்டி முரண்பாட்டுக்கு அழைக்கும் வேலை.

அடுத்தது – மிக முக்கியமானது. கடல் படுக்கையில் நிலத்துக்குக் கீழ் எரிபொருள், எரிவாயுவை உறிஞ்சி எடுக்கும்போது, அருகில் இந்தியக் கடற்பிரதேசத்துக்குக் கீழ், அவர்களுக்குரிய படுக்கையின் கீழ், சேமிக்கப்பட்டிருக்கும் எரிபொருள் எரிவாயுவையும் இலங்கை சூறையாடுதான குற்றச்சாட்டு எழலாம். பல்லாயிரம் அடிகளுக்குக் கீழ் – கடல் படுக்கைகளுக்கு அடியில் – அடைந்து கிடக்கும் எரிபொருள், எரிவாயு சேமிப்புத் தளங்கள் நீண்டு அகன்று, பரந்து இந்தியப் பிரதேசம் வரை விஸ்தீரணம் கொண்டிருக்கலாம். அப்படி ஓர் அபிப்பிராயம் இந்தியாவுக்கு வராத விதத்தில் அகழ்வுப்பணியும், எரிபொருள், எரிவாயு உறிஞ்சும் வேலையும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எங்கள் வீட்டுக் கிணற்றில் நாம் தண்ணீர் இறைத்தால் பக்கத்து வீட்டுக் கிணற்றில் தண்ணீர் வற்றும் கதைதான் இது.

இந்த விடயத்திலும் இலங்கை கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பது நல்லது.

## அமெரிக்க சுற்றுலாப் பயணி இலங்கையில் சிரமப்பட்டார்!

### விசாரணை நடத்த அமைச்சர் பிரசன்ன பணிப்பு

இலங்கைக்கு வந்த அமெரிக்க சுற்றுலாப் பயணி ஒருவர் சிரமத்திற்குள்ளாகி திரும்பிச் சென்ற சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 7 முதல் 8 நாள்கள் சுற்றுலாவாக இலங்கைக்கு வந்த அவர், பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டில் பஸ்கள் மற்றும் ரயில்கள் இயக்கப்படாதமையால் 5 மணி நேரத்துக்குள் திரும்பிச்சென்றார் எனக் கூறியிருந்தார்.

போக்குவரத்து அல்லது ஹோட்டல் வசதிகள் இல்லாதமையால் அவர் கடுமையான சிரமத்துக்கு ஆளானார் எனவும் தன்னால் அவரது பயண நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

அத்தோடு நாடு சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்திருக்கும் என்று அதிகாரிகள் கூறினாலும், வசதிகள் இல்லாதமையால், இலங்கை இன்னும் முடக்க நிலையில் உள்ளது என வீடியோ ஒன்றை வெளியிட்டு அந்த சுற்றுலாப் பயணி கூறியிருந்தார்.

இருப்பினும் அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

## இலங்கையில் 17 சிசுக்கள் உட்பட 67 சிறுவர்கள் கொவிட்டால் சாவு!

இலங்கையில் இதுவரையில், 17 சிசுக்கள் உட்பட 67 சிறுவர்கள் கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர் எனக் குடும்பநல சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், நாட்டில் இதுவரையில் 18 வயதுக்குக் குறைவான 69 ஆயிரத்து 130 சிறுவர்களுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் ஒரு மாதத்திற்கும் குறைவான வயதுடைய 17 சிசுக்களும் ஒரு மாதம் முதல் ஒரு வருடத்துக்கு இடைப்பட்ட வயதுடைய 17 சிறுவர்களும் ஒரு வயது முதல் 5 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய 13 சிறுவர்களும் 6 முதல் 12 வயதுக்கு இடைப்பட்ட 12 சிறுவர்களும் 12 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட 5 சிறுவர்களும் 15 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட 3 சிறுவர்களும் இவ்வாறு தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொரோனாப் பரவலில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் வைத்தியர் கபில ஜயரத்ன பெற்றோர்களிடம் கோரியுள்ளார்.

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கத் திண்டாடுகின்றது அரசு!

### திலீபன் எம்.பி. கூறுகிறார்

கொரோனா அச்சுறுத்தலால் ஏற்பட்ட வீழ்ச்சியால், அரசாங்க ஊழியர்களுக்குக் கூட சம்பளத்தை வழங்கமுடியாது அரசாங்கம் திண்டாடுகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா - ஆச்சிபுரம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் கு.திலீபன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

புதிய திட்டங்களை வர இருக்கின்ற வரவு செலவுத்திட்டத்தில் பார்த்து அறிந்துகொள்ளலாம். அதில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட கிராமங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இன்று வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட கொரோனா வீழ்ச்சியால் இன்று அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்தைக் கொடுப்பதற்கு கூட அரசாங்கம் திண்டாடுகின்றது.

ஆகையால் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றமும் இடம்பெற்றுள்ளது. இது நிரந்தரமானதல்ல, தற்காலிகமானது.

அத்துடன் சேதன பசளை திட்டத்தை எமது அரசாங்கம் முன்னெடுத்தது. ஆனால் எதிர்க்கட்சிகளும் இங்குள்ள விதண்டாவாதிகளும் சேதன பசளை நாட்டுக்கு ஒவ்வாது விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என்கின்றனர்.

உயிருடன் விளையாடக்கூடிய விளையாட்டுத்தான் இரசாயன உரம். வவுனியா நொச்சுமோட்டை கிராமத்துக்கு அருகில் உள்ள கிராமத்தில் 4 அடி நிலத்தைத் தோண்டினால் வெள்ளை கழியாக உள்ளது. அதற்கு காரணம் அங்கு போடப்பட்ட யூரியா உரம். அது எவ்வளவு பாதிப்பானது.

ஆகவே எந்தத் திட்டத்தை முன்னெடுத்தாலும் அது கடினமாகத்தான இருக்கும். பின்னர் அது சரியாக வரும் அதனை நம்பலாம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் வழங்கப்படும் சேவையை விரிவுபடுத்தத் திட்டம்!

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் வழங்கப்படும் ஒரு நாள் சேவைகளை மேலும் விரிவுபடுத்துமாறு போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.


மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட முன்னேற்ற மதிப்பாய்வில் கலந்து கொண்ட அமைச்சர் புதிய தொழில்நுட்பத்தை இதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, அதிக எண்ணிக்கையிலான வாகனப் பதிவுகள், உரிமை கைமாற்றல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஆகியவை ஒரே நாளில் வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது ஒருநாள் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் சேவை வேரஹெர, அம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகங்களில் மட்டுமே இடம்பெற்று வருகிறது. ஒருநாள் வாகனப் பதிவு சேவை நாரஹேன்பிட்ட, கம்பஹா, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் யாழ்ப்பாண அலுவலகங்களில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெரஹெரா, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், களுத்துறை, கம்பஹா, கண்டி, குருநாகல் மற்றும் மொனராகலை ஆகிய அலுவலகங்களில் மட்டுமே ஒன்லைன் சேவைகள் இடம்பெறுகின்றன. இந்தச் சேவைகளை விரிவுபடுத்தவும், இந்த சேவைகளை நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள கிளை அலுவலகங்கள் மூலம் பொதுமக்கள் பெற வசதிகளை ஏற்படுத்துமாறும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்



# லா பாமா (La Palma) எரிமலை வெடிப்பு ஒரு சூழலியல் நோக்கு



புவிச்சரிதவியல் தோற்றப்பாடுகளில் மிக முக்கிய அம்சமாகவும் புவியின் இயக்கவியலில் ஒரு பிரதான செயல்முறையாகவும் எரிமலை விளங்குகின்றது. புவியில் காணப்படும் பெருமளவான பாறைகள் எரிமலைச் செயற்பாடுகளினால் உருவாக்கப்பட்டவை. முக்கியமான தீவுக் கூட்டங்களையும் அவை உருவாக்கியுள்ளன. புவியோட்டு விருத்திக்குரிய தகடுகளுடன் இணைந்து புவிநடுக்கங்கள், சமுத்திர வடிநிலங்கள், கண்டங்கள் மற்றும் மலைத்தொடர்களையும் எரிமலைகள் உருவாக்கியுள்ளன. எரிமலை செயற்பாடுகளின் உலக ரீதியான வலயமானது விலகும் தகட்டு எல்லைகளிலேயே அமைந்துள்ளதுடன் பெருமளவானவை சமுத்திரத்திற்குக் கீழேயே மறைந்து காணப்படுகின்றன. எரிமலைகளிலிருந்து வரும் லாவா குழம்பு சில வேளைகளில் கடல் மட்டத்திற்கு மேல் தள்ளப்பட்டு உறைந்தும் விடுகின்றது. இதற்குச் சிறந்த உதாரணமாக விளங்கும் ஐஸ்லாந்து முற்று முழுதாக எரிமலைப் பாறையிலேயே உருவாகியுள்ளது. 1963 இல் ஏற்பட்ட எரிமலை வெடிப்புக்களில் ஐஸ்லாந்தின் தென் கரைகளுக்கு அப்பால் "சுவட்சே" என்ற புதிய தீவு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எரிமலைகளின் முக்கியமான செயற்பாட்டு வலயமானது, கீழிறங்கும் தகட்டு வலயங்கள் (Subduction zones) நெடுகிலும் அமைந்துள்ளதைக் காணலாம். பசுபிக் சமுத்திர வடிநிலத்தில் அமைந்துள்ள எரிமலை வலயம் "நெருப்பு வளையம்" (Ring of Fire) என அழைக்கப்படுகின்றது. இங்கு ஏறக்குறைய 450 எரிமலைகள் காணப்படுகின்றன. விலகும் தகட்டு எல்லைகள் நெடுகிலும் உள்ள எரிமலைகள் பெரும்பாலும் கடலுக்குக் கீழேயே காணப்படுவதினால் அவற்றின் இயல்புகள் பற்றி அண்மைக்காலம் வரை பெரிதும் அறியப்பட்டிருக்கவில்லை. ஆனால், பல்வேறு வகையான ஆய்வுகள் குறிப்பாக, கடற்கீழ் ஒளிப்படங்கள், சேறுவாருதல், துளையிடல், கடற்கீழ் பக்கப் பார்வை ஆகியவற்றின் மூலமான அவதானிப்புக்கள் எரிமலை தொடர்பான விளக்கங்களை மேலும் தெளிவாக்கியது. இத்தகைய ஆய்வுகளின் படி விலகும் தகட்டு எல்லைகளில் எரிமலைச் செயற்பாடுகளின் போது இடம்பெறும் பசோல்ட் மக்மாவின் வெடிப்புக்கள் புவிச்சரித காலம் முழுவதும் இடம்பெற்றிருக்கின்றன என்று அறியப்பட்டது.

புவி மேற்பரப்பிலிருந்து 100 கிலோ மீற்றர் ஆழம் வரையும் உருகுதலுக்கான வெப்பநிலை மிகக்



குறைவாக இருக்கின்றது. ஆனால் 100 - 200 Km வரையுள்ள ஆழத்தில் பாகுக் கோளத்தின் (Aesthenos phere) வெப்பநிலை உயர்வடைவதினால் உருகும் நிலை ஏற்படுகின்றது. ஆழம் அதிகரிக்க வெப்பமும் அமுக்கமும் அதிகரிக்கின்றது. அண்மைக் காலங்களில் ஆழ்கடல் துளையிடல் மூலமாக விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட அமெரிக்கா மற்றும் பிரான்சிய நாட்டு விஞ்ஞானிகள் ஐஸ்லாந்துக்குத் தெற்காக உள்ள மத்திய அத்திலாந்திக் தொடரின் பகுதிகளைப் படமாக எடுத்தனர். சமுத்திரத் தரையைச் சென்றடையும் வகையில் ஆழமாகச் சுழியோடும் கருவிகளைப் பயன்படுத்தி மாதிரிகளைச் சேகரித்தனர். ஆயிரக்கணக்கில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களைப் பயன்படுத்தி சமுத்திரத் தொடர்களில் பெருமளவான லாவா அமைப்புக்கள் அடையாளம் செய்யப்பட்டன. திரவ நிலையிலான குழம்பு மேல்நோக்கி சமுத்திரத் தரைக்கு மேல் வந்ததும் குளிர்ந்து கடற் தரைகளில் திண்மமாகி விடுகின்றன. இவைகளே பசோல்ட் திரட்சிகள் அல்லது "எரிமலைக் குழம்புப் பாறைகள்" என அழைக்கப்படுகின்றன.

புவியோட்டுப் பகுதியில் சமுத்திரத் தொடர் நெடுகிலும் எண்ணிக்கையற்ற திறந்த பிளவுகள் (Fissures) காணப்படுகின்றன என்ற இன்னொரு முக்கியமான விடயம் இவ் ஆய்வுக் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆறு சதுரக் கிலோ மீற்றர் பரப்பில் மூன்று மீற்றர் அகலமான 450 உடைவுகள் (Fractures) அவதானிக்கப்பட்டது. சமுத்திர ஓடு இரு பக்கமும் தள்ளப்பட்டு விலகிச் சென்றது என்பதைக் கூறும் உறுதியான சான்றாக இது விளங்குகின்றது.

உலகின் எரிமலைகளில் 75 சதவீதமானவை கடற்தரைகளிலேயே காணப்படுகின்றது. எரிமலைகளை அவற்றின் தோற்றத்தைப் பொறுத்து (i) செயற்படு எரிமலை (ii) உறங்கு எரிமலை (iii) அவிந்த எரிமலை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். உயிர்ப்பு நிலையில் காணப்படுவதற்கான எவ்வித அறிகுறியும் இல்லாத, நீண்டகாலமாக வானிலையழிதலுக்கு உட்பட்டுள்ள எரிமலைகள் அவிந்த எரிமலைகள் ஆகும். இயக்கமின்றிச் சில காலங்களுக்குக் காணப்பட்டாலும் மோசமாக வெடிக்கும் அறிகுறிகளைக் கொண்டவை உறங்கு எரிமலைகளாகும். விசூவியஸ் போன்ற காலத்திற்குக் காலம் வெடிக்கும் எரிமலைகள் செயற்படு எரிமலைகளாகும். எரிமலைகள் வெடித்துச் சிதறும் போது அவற்றிலிருந்து வெளியேறும் வாயுக்களின் வடிவங்களைப் பொறுத்தும் எரிமலைகள் வகைப்படுத்தப்படுகின்றன. அத்துடன் எரிமலைகளினால் உருவாக்கப்பட்ட பல நிலவுருவங்கள் புவி மேற்பரப்பில் காணப்படுகின்றன. புவியின் பல்வேறு இடங்களில் காலத்திற்குக் காலம் எரிமலை வெடிப்புக்கள் இன்று வரை இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடியும்.

2021 செப்டெம்பர் 19 இல் ஸ்பெயினின் கனாரித் தீவுகளில் ஒன்றான லா பாமா என்னும் இடத்தில் எரிமலை ஒன்று வெடித்தது. ஸ்பெயினின் தீவுக் கூட்டங்கள் வட மேற்கு ஆபிரிக்காவிலிருந்து 108 கிலோ மீற்றர் தூரத்தில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ளது. கரடுமுரடான எரிமலைத் தீவுகள் கறுப்பு வெள்ளை மணற் கடற்கரைகளைக் கொண்டவை. 'லா பாமா' (La Palma) என்பது ஸ்பெயினின் கனாரித் தீவுகளில் உள்ள எட்டு மலைத் தீவுகளில் ஒன்றாகும். ஏறக்குறைய 80 ஆயிரம் மக்கள் இங்கு வசிக்கின்றனர். ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மையங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

லா பாமாவிலுள்ள 'கம்பிறி விஜா' (Cumbre Vieja) என்னும் எரிமலை வெடித்த போது ஏறக்குறைய இருபது ஜெட் போர் விமானங்களின் இரைச்சல் ஒரே




நேரத்தில் கேட்பது போல் இருந்தது என மக்கள் குறிப்பிட்டனர். எரிமலை வெடித்த போது லாவாக் குழம்பும் பாறைகளும் வெளியே வீசப்பட்டன. எரிமலைக் குழம்பு அயலிலுள்ள கிராமத்தினை நோக்கி வழிந்தோடியது. எரிமலை வாயின் வடக்குப் பக்கம் இடிந்து விழுந்த போது லாவா குழம்பு பெரும் வேகத்துடன் பாயத் தொடங்கியது. எரிமலை வெடிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே, ஏறக்குறைய 22,000 புவியதிர்வுகள் ஏற்பட்டதன் பின்னர் மிகுந்த எச்சரிக்கையுடன் அயலிலுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டனர்.



எரிமலையின் உட்பகுதியிலிருந்து வெளிவந்த லாவா ஊற்றுக்கள் நூற்றுக்கு அதிகமான மீற்றர் உயரத்திற்கு வெளியே வீசப்பட்டன. உருகிய பாறைக் குழம்பு செம்மஞ்சள் நிறத்தில் ஒளிரும் மூன்று ஆறுகள் போன்று எரிமலைக் குன்றின் கீழ்ப்பகுதியை நோக்கிக் கொட்டியது. மரக் காடுகள், பண்ணை நிலங்கள் என்பவற்றை ஊடறுத்துக் கொண்டு வாயுக்கள் கீழ்நோக்கித் தாழ் நிலத்தைச் சென்றடைந்ததும் பரவத் தொடங்கின. ஒரு பகுதியில் ஆறாக ஓடிய எரிமலைக் குழம்பு பல நூறு மீற்றர்கள் நீளமானதாகவும் பத்து மீற்றர்களுக்கு மேற்பட்ட அகலத்திலும் வீதிகளை ஊடறுத்து எல்பாசோ (El Paso) என்னும் இடத்தில் ஐதாக அமைந்திருந்த வீடுகளை முழ்கடித்து விட்டது.

எரிமலைக் குழம்பின் பாய்ச்சலுக்கு நூற்றுக்கணக்கான வீடுகள், வியாபார நிலையங்கள் அழிவடைந்தன. ஏறக்குறைய 476 ஹெக்டேயர் நிலப் பகுதியைச் சுட்டெரிக்கும் வெப்பத்தினால் லாவா பொசுக்கி விட்டது. அல்லது மூடிவிட்டது. ஏறக்குறைய 31 கிலோ மீற்றர் நீளமான வீதிகள், ஆயிரக்கணக்கான கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 1971 ஆம் ஆண்டு ஏறக்குறைய




50 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த எரிமலை வெடித்தது. நீண்ட காலமாக அது வெடிக்காததினால் மக்கள் பல விவசாய நடவடிக்கைகளை அண்மித்த பகுதிகளில் ஆரம்பித்திருந்தனர். பெருமளவான வாழைத் தோட்டங்கள், திராட்சைத் தோட்டங்கள், அவக்காடோ, கொய்யா மரத் தோட்டங்கள், பப்பாளிப் பழ மரங்கள் பெருமளவில் எரிமலையைச் சூழவுள்ள பகுதிகளில் காணப்பட்டன. எரிமலைக் குழம்பின் நகர்வினால் இவை யாவும் அழிந்து விட்டன. அது மட்டுமன்றி நீர்ப்பாசன வலைப்பின்னல்கள் பாதிக்கப்பட்டதுடன் தரைக்கீழ் நீர் நச்சுத் தன்மை கொண்டதாக மாறியதுடன் வீதிகளும் குழம்பின் பாய்ச்சலினால் முடக்கப்பட்டு விட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


## அங்கம் - 159

**அக்காலத்தை - எண்பதுகளின் கால கட்டத்தை - பற்றி ஆய்வு செய்யும் தற்காலத்து இளைஞர்கள், இந்த அட்டூழியங்கள் பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளார்கள் என அறிந்து அதனையும் வாசகர்களுக்குத் தரலாம் என கருதி சில கேள்விகளை முன்வைத்தேன். அவர்களின் பதில்களை அப்படியே தருகிறேன். இது அந்த இளைய சமுதாயத்தின் சொந்த கருத்துக்கள். அதில் எள்ளளவும் உந்துதல்கள் இல்லை. அவை வருமாறு:-**

### * விடுதலைப் புலிகளின் தலைமையும் இராஜ தந்திர அணுகுமுறைகளும்


ஆனால் எனது சிந்தனையென்னவென்றால் விடுதலைப் புலிகள் ஆயுதப்போராட்டம் ஒன்றின் மூலமாக மாத்திரமே தமது தனித் தமிழீழத்தை அடைந்து விடலாம் என்று எண்ணியது பாரிய பின்னடைவான சிந்தனை. பூகோள அரசியலின் அபரிவிதமான தாக்கத்தையும் இந்திய உபகண்டத்தினது ஆதிக்கத்தையும் குறைத்து மதிப்பிட்டார்களா அல்லது தங்களது ஆயுதப்பலத்திற்கும் அர்ப்பணிக்கத் தயங்காத போராளிகளுக்காகவும் அவர்கள் பயப்பட வேண்டும் என்று நினைத்தார்களா? என்பது கவலைக்குரிய கேள்வி. உலக அரசியலையும் சர்வதேச அமைப்புக்களையும் சக்தி மிக்க நாடுகளே அன்றும் இன்றும் நிர்ணயிக்கின்றன. ஆனால் ஆரம்ப காலங்களில் இருந்தே விடுதலைப் புலிகள் இராஜதந்திர உறவுகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் நம்பிக்கையற்றிருந்தமையும் ஆயுதமே வழி என்று எண்ணியமையும் முதல் பலவீனமாகும். இச்சர்வதேச அரசியல் குறித்தும் சர்வதேச சட்டங்கள் குறித்தும் 2005 - 2010 களில் இலங்கையரசாங்கமானது மிகச்சிறந்த தெளிவை கொண்டிருந்தமையும் அதற்கேற்ப காய்நகர்த்தல்களை செய்தமையும் வெற்றியை ஈட்டிக்கொடுத்ததுடன் இன்று வரை அவர்களை போர்க்குற்றச்சாட்டில் இருந்து ஏதோ ஒரு வகையில் காத்து அல்லது தட்டிக்கழிக்க வழிகள் கொடுத்து நிற்கின்றது என்பேன்.

2011 இன் அமெரிக்க இரட்டைக்கோபுர தாக்குதலானது உரிமைப்போராட்ட குழுக்களுக்கு பாரிய



ராஜீவ் காந்தி

பின்னடைவை ஏற்படுத்தியிருந்தது. நெறிமுறையான நோக்கம் ஒன்றிற்கான போராட்டமாக அமையினும் பயங்கரவாதம் எனும் முத்திரையை இலகுவாக பெற வேண்டிய நிலை பல குழுக்களுக்கும் ஏற்பட்டது. அது இலங்கையரசாங்கத்திற்கு சாதகமாக அமைந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அதன் தாற்பரியத்தை சரியாக புரிந்து கொண்டனரா என்பது கேள்விக்குரியது. காரணம் செப்ரெம்பர் தாக்குதலின் பாதகம் புரிந்திருப்பின் 2001 - 2004 சமாதானப் பேச்சுக்களை வலுவாகவும் சரியாகவும் பயன்படுத்தியிருப்பர். அது சர்வதேசத்திற்கும் புலப்பட்டிருந்தது. புலிகள் இந்த பேச்சுவார்த்தைக் காலப்பகுதியை தம்மை மேலும் பலப்படுத்தவே பயன்படுத்துகின்றனர் என அமெரிக்க உயர்மட்டம் தெரிவித்திருந்தது. அதன் பின்னர் புலிகள் பொதுமக்களின் மீது பஸ்களிலும் பொது இடங்களிலும் நடாத்திய தாக்குதல்கள் பயங்கரவாதிகள் எனக் கூறிவந்தவர்களுக்கு மேலும் பலனளித்தது. அதாவது சுருக்கமாகக் கூறின் சர்வதேச சட்டமானது பொதுமக்களை குறிவைத்தோ அல்லது பொதுமக்களை வேறுபிரிக்காது நடாத்தப்படும் தாக்குதல்களை பயங்கரவாதத் தாக்குதல்கள் என வகையறுக்கிறது. சிங்கள மக்களின் மீதான தாக்குதல்கள் குறிப்பாக அவர்களது பஸ்களில் தாக்குதல்களை நடாத்தியமை விடுதலைப் புலிகளை மிலேச்சத்தனமானவர்களாகவே காட்டியது மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கம் என பறைசாற்றியவர்களுக்கு காரணத் தையும் காரியத்தையும் நாமாகவே கொடுத்தா கவே உணர்கிறேன்.



அமிர்தலிங்கம்

### * வன்முறை மீதான அவர்களது பற்றுறுதி மற்றும் உரிமைப் போராட்டத்தின் அவசியமும்

வன்முறைகளை அரசியல் தலைவர்கள் மீதும் புத்திஜீவிகள் மீதும் மற்றும் பொது மக்கள் மீதும் செலுத்தியமை புலிகளின் தலைமைக்கு எதிர்மறையான ஒரு தாக்கத்தையே சர்வதேச மட்டத்திலும் உள்ளகத்திலும் ஏற்படுத்தியது என்பது உண்மை. இந்தப் படுகொலைகள் ஆரம்ப காலத்தில் இருந்தே இடம்பெற்றிருக்கின்றன. ஒருவரின் இருப்பை இல்லாமல் ஆக்குவதன் மூலமாக ஒரு சவாலை வெற்றி கொண்டுவிடலாம் என எண்ணிய தலைமை ஒரு கொலை ஆயிரம் வினாக்களை சமூகத்தில் உருவாக்கி வெற்றிக்குபதிலாக ஒரு சவாலையே உருவாக்கும் அல்லது சில சமயங்களில் அழிக்கப்பட்ட அந்தக் குரலோ செயலோ எதிர்காலத்தில் மேலும் வலுப்பெறலாம் என்பதையோ உணரவில்லை. இவ்வாறான படுகொலைகளின் மூலமாக ஏற்படுத்தப்பட்ட பகையும் பழிவாங்கல்களும் இறுதிவரை புலிகளுக்கு சவாலாகவே பலமட்டங்களிலும் செயற்பட்டனஎன்பதுவெளிச்சம்அதுதமிழர்களுக்கிடையே பிளவுகளை ஏற் படுத்தி எதிரணிக்கு பலம் சேர்த்தன.

தமிழ் மக்கள் வன்முறை மிக்க வரலாற்றை கொண்டிருக்கின்றோம். கடந்த கால வன்முறைகளும் பாரபட்சங்களும் போராட்டம் ஒன்றிற்கான அவசியத்தையும் கொடுத்தது. இந்த உரிமைப்போராட்ட தேவைப்பாடு சர்வதேசம் உட்பட அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாக இருந்தது - ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் அதனை விடுதலைப் புலிகள் தமது போராட்ட பயணப்பாதையில் கையாண்ட விதம் கறைகளையே படியவிட்டது. போராட்டத்தின் நெறி முறைத்தன்மைகள் கேள்விக்குட்படுத்தப்பட்டன. சுதந்திரக் கொடியானாலும் அந்த கொடியின் சுதந்திரம் கம்பத்தின் உச்சி வரை தான், நல்லவையோ கெட்டவையே எல்லை என்பது நிர்ணயமானதும் அவசியமானதுமாகும். அது விடுதலைக்காய் இருப்பினும் கையாளும் வன்முறைகளும் கூட எல்லைப்படுத்தப் பட்டனவே.

### அப்படியானால் தமிழ் மக்கள் வாய்ப்புக்களை தவறவிட்டார்களா?

என்னுடைய குறுகிய அறிவுக்கு எட்டியவரை தமிழர்களை பொறுத்தவரை இனப்பிரச்சினையை தீர்க்க இருபெரும் வாய்ப்புக்களை நாம் பெற்றிருந்தோம். ஒன்று இந்தியாவினால் தரப்பட்டது. அதாவது இந்திரா காந்தி அம்மையாராலும் ராஜீவ் காந்தி அவர்களாலும் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் இரண்டுமே விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டன. ஒன்று அமிர்தலிங்கம் அவர்களை படுகொலை செய்ததன் மூலமும் மற்றையது ராஜீவ் காந்தியின் படுகொலை மூலமாக அவ்வாய்ப்புக்களை நிர்மூலமாக்கினர் என்பது தான் என்னளவிலும் நான் சமுதாயத்தில் பழகிய பலரது அபிப்பிராயத்திலும் உணரமுடிகிறது. அதன் பின்னர் சந்திரிக்கா அம்மையாரின் முயற்சியால் அமைக்கப்பட்ட வாய்ப்புக்கள் நீலன் திருச்செல்வத்தின் மீதான படுகொலை மூலம் நம்பிக்கை இழப்பினும் அதன் பின்னர் வழங்கப்பட்ட வாய்ப்புக்களும் புலிகளின் தலைமையினால் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் இந்தப் படுகொலைகள் புத்திஜீவிகள் மீதானது என்பதால் சர்வதேச மட்டத்தில் விடுதலை புலிகள் மீதான அபிப்பிராயங்கள் பலவீனமானது. ஓர் சமாதான தூதுவனை அல்லது போராட்டம் ஒன்றிற்கான தீர்வினை பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமாக காண முயலும் போது அதனை முறியடிப்பது அல்லது புறக்கணிப்பது அந்த விடுதலை போராட்டத்தை தான் பலவீனமாக்கும் என்பது தெளிவு. அது விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றிலும் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு படுகொலைகளை செய்வதன் மூலம் தமக்கு பணிந்து விடுவார்கள் என்பதோ அல்லது எதிரிகளை அல்லது ஏனைய நாடுகளை வெற்றி கொண்டு தமிழீழத்தை அடைந்து விடலாம் என்று எண்ணியமை விடுதலைப் புலிகளின் தலைமையின் மிகப்பெரும் அறியாமை. விடுதலைப் புலிகளின் தலைமை தாம் சிறு குளத்தில் உள்ள பெரிய மீன் என அறியாமல் தாம் நீந்தும் குளத்தை கடல் என எண்ணி தவறிழைத்ததாகவே பலர் உணர்கிறார்கள்.

இலங்கைப் படையினராலும் சிங்களப் பேரினவாதக்குழுக்களாலும் வன்முறைகள் தமிழருக்கெதிராக கட்டவிழ்த்தப்பட்ட போது இலகுவாக அத்தாக்குதல்கள் பயங்கரவாதிகளுக்கு எதிரானது என காரணப்படுத்தியிருந்தார்கள். ஆனால் அத்தாக்குதல்கள் அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிரானது. இவை குமுதினிப்படகு தாக்குதல் முதல் சத்துருக்கொண்டான் என பல. பயங்கரவாதத்திற்கு எதிரான உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களை இலங்கை அரசாங்கம் வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டது என்பது தெளிவு.

(07ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் கொள்கலன் திருமலையில் விபத்து!



திருகோணமலையில் அமைந்துள்ள இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிபொருள் ஏற்றிச்சென்ற எரிபொருள் கொள்கலன் ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 4 மணியளவில் கப்பல்துறை எனும் பகுதியில் விபத்துக்குள்ளானது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான இந்த வாகனம், வீதியின் அருகிலுள்ள பாலம் ஒன்றையும் உடைத்துக்கொண்டும் திருகோணமலை –கண்டி பிரதான வீதியில் தடம்புரண்டுள்ளது.

விபத்துக்கான காரணம் இன்னும் அறியப்படாத நிலையில் சாரதி நித்திரையாகியிருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விபத்தில் வாகனத்தில் பயணித்த சாரதி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இனப் படுகொலையும் ...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு ஓர் சிறுபான்மையினக்குழுக்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களில் இருக்கும் உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் விடுதலைப் புலிகள் தமது இராஜதந்திர முயற்சிகளில் பயன்படுத்திக் கொண்டனரா என்றால் அது கேள்விக்குறியே.

**படுகொலைகள் விடுதலைப் போராட்டத்தை பாதித்தது என்கிறீர்களா?**

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளினால் கையாளப்பட்ட அணுகுமுறைகளுள் ஒன்றாக தமது தமிழீழ கோரிக்கைக்கு எதிராகச் செயற்படுபவர்களை அல்லது மாற்றுக் கருத்தை கொண்டிருப்பவர்களை அழிப்பதாகும். இவ்வாறான அணுகுமுறையினால் தமிழினம் பல புலமையாளர்களை இழந்திருக்கிறது. சில உதாரணங்களை குறிப்பிட்டுச்சொல்லப்போனால் அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலை சமாதானப்பேச்சுக்களில் வலுவான பாதிப்பினை ஏற்படுத்தியது. இந்தியாவின் தலையீடானது மிகவும் உறுதியாக இருந்த காலப் பகுதியாகும். ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஆட்சி குறித்தான இந்திரா காந்தி அம்மையாரினது பார்வையானது தமிழ் மக்களுக்கு சார்பாகவே அமைந்தது. அத்தோடு அமிர்தலிங்கம் மீதான இந்திராகாந்தியின் நம்பிக்கை ஒரு சமாதான முன்னெடுப்பிற்கு ஆதரவாகவே அமைந்தது. சர்வதேச அழுத்தங்களையும் இலங்கையரசாங்கத்தின் காரத்தையும் இந்திராகாந்தி முகங்கொடுத்த விதமும் பதிலளித்த விதமும் தமிழ்மக்களுக்கு பெரும் நம்பிக்கையை அளித்தவொன்றாக இருந்தன. அமிர்தலிங்கத்தை அன்னியப்படுத்தியது ஒரு தலைமைத்துவ போட்டியா? தமிழ் மக்களுக்கான தீர்வு தங்கள் மூலமாகத்தான் எட்டப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பா? அல்லது இந்த பேச்சுவார்த்தைகள் பயனளிக்காது ஆயுதம் மூலமாக சர்வதேசத்திற்கு அழுத்தத்தை கொடுத்தது இலங்கை அரசாங்கத்தை அடிபணிய வைத்து தமிழீழத்தை பெறமுடியும் எனும் நம்பிக்கையினாலா என்பது இன்றும் புலப்படவில்லை. ஆனால் இவற்றில் எதுவானாலும் அது இன்று வரை இலங்கைத் தமிழர்கள் அதற்கான விலையை செலுத்தி கொண்டு தான் இருக்கின்றனர் என்பது உண்மை.

அதனை விட ஏனைய விடுதலைப் போராட்ட குழுக்களின் தலைவர்களை அழித்தமை பல பிரிவுகளை தமிழர்களிடையே ஏற்படுத்தியது. ஓர் சமூகத்தில் பல வேறுபட்ட கருத்துக்கள் இருக்கும் பார்வைகள் இருக்கும். தலைவன் என்பவன் தாமே ஒரு செயலை செய்து முடிக்க ஆற்றலுள்ளவனாக இருப்பினும் தமது குழுவுடன் இணைந்து அவர்களது வேறுபாடுகளை போக்க முயற்சித்து பெரும்பான்மையானோருடன் சேர்ந்து அச்செயலை செய்து முடிப்பான். அதை விடுத்து குழுவில் உள்ள வேற்றுகருத்தாளர்களை அழித்து தனது இலக்கை அடைய முயற்சிப்பது சவாலானது. விடுதலைப் புலிகளின் தலைமைகள் பல விடயங்களில் இப்பல வீனமான பக்கத்தை காட்டியுள்ளனர். ஆரம்பம் முதல் இறுதிவரை இவ்வாறான தமிழ் இனத்துக்குள்ளேயே நடந்த படுகொலைகளும் பழிவாங்கல்களும் ஏராளம். இது புலிகளுக்கு எதிரான ஒரு சிறு தமிழ்ச்சமூகத்தையே பின்னாள்களில் உருவாக்கியது எனலாம்.

# 90 பாடசாலைகள் 21ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் ஆரம்பம்!

## அரச அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவிப்பு



மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகளை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாடசாலைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 11.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் 44 பாடசாலைகள் 2 ஆயிரத்து 588 மாணவர்களைக் கொண்டதாகவும், மன்னார் வலயத்தில் 46 பாடசாலைகள் 3 ஆயிரத்து 784 மாணவர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

மேற்படி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்ற போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெளிவுபடுத்தினார்.

மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பஸ் போக்குவரத்து தொடர்பாக அரச மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினருடன் கலந்துரையாடி இருந்தோம்.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம்,மற்றும் வவுனியாவில் இருந்து மன்னாருக்கு வருகின்ற ஆசிரியர்களுக்காக விசேட பஸ் சேவை ஒன்றையும் ஆரம்பிக்க உள்ளமை தொடர்பாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயணம் செய்வதற்கு முறையான போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு அரச தனியார் போக்குவரத்துத் துறையினருக்கு ஆலோசனை வழங்கி உள்ளோம்.

எதிர்வரும் 21 ஆம் திகதி முன்பள்ளி பாடசாலைகளையும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார், மடு வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சீன நிறுவனத்திடம் இருந்து உரங்களை இறக்குமதி செய்வதற்கான தடை இராஜதந்திர பிரச்சினை அல்ல!

## அரசாங்கம் கூறுகின்றது




சீன நிறுவனத்திடம் இருந்து உரங்களை இறக்குமதி செய்வதற்கான தடை இராஜதந்திர பிரச்சினை அல்ல என்று அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவை பேச்சாளர் டளஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்:–

சீன நிறுவனத்திடமிருந்து கரிம உரங்களை இறக்குமதி செய்வதை தடை செய்யும் முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியுமெனத் தெரிவித்தார்.

எந்த நிறுவனமும் மேன்முறையீடு செய்யலாம் என்றும் அதுதான் ஜனநாயகம் என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் இலங்கையர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உள்ளடக்கியது என்றும் இராஜதந்திர பிரச்சினையாக இதைப் பார்க்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உரங்களில் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், சீன நிறுவனத்திடமிருந்து கரிம உரத்தை இறக்குமதி செய்ய முடிவு எடுக்கப்படவில்லை என்று விவசாய அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது.

இதனையடுத்து, சீன நிறுவனத்திடமிருந்து கரிம உரங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக அறிவியல் மற்றும் உண்மைகளை மதிக்குமாறு சீனா சமீபத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சவால்கள் நிறைந்துள்ள இந்தக் காலக்கட்டத்தை அரசின் இறுதிக்கட்டமாக எவரும் கருதவேண்டாம்!

## டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு

அரசாங்கத்துக்கு பல தடைகளும் சவால்களும் வந்தாலும், இதனை அரசாங்கத்தின் இறுதிக் காலமாக எவரும் கருதிவிடக்கூடாது என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நவம்பர் 12 ஆம் திகதி 2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் முதல் வாசிப்புக்காக நாடாளுமன்றில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

டிசெம்பர் 10 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

69 லட்சம் மக்களின் எதிர்ப்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது போனமையை அமைச்சரவை உள்ளிட்ட தனது அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இது சாதாரண ஒரு கருத்தாகும். குறைகள் இருப்பின் அதனை ஏற்றுக் கொண்டு நிவர்த்தி செய்ய நாம் தயாராகவே இருக்கிறோம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள உரத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை




எடுத்துள்ளது.

எனினும், இந்தத் தடைகளைப் பார்த்து எவரும் அரசாங்கத்தின் இறுதிக் காலமாக இதனைக் கருதி விட வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம். – என்றார்.

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான ஒரு நிலைப்பாட்டை அரசு எடுக்க மாட்டாது!

## அடித்துக் கூறுகின்றார் சித்தார்த்தன் எம்.பி.



இந்த அரசாங்கம் வந்த பொழுதே எமக்குத் தெரியும் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சாதகமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க மாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய போக்குகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய நிலையிலேயே இந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் மிகப்பெரிய அளவில் செல்வாக்கு இழந்து வருகின்றது. காரணம் விலைவாசி உயர்வு, சரியான முதலிலேயே ஆட்சி நடைபெறவில்லை என்ற எண்ணப்பாடு ஆகும்.

ஆரம்ப காலங்களில் அரசு மிகவும் திறமையாக செயல்பட்டு கொரோனாவை கட்டுப்படுத்துவதில் முன் மாதிரியாக இருந்தாலும் அண்மைக்காலங்களில் பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது.

அதே நேரத்தில் தடுப்பூசி போடப்படுவதில் மூன்றாம் உலக நாடுகளை பார்க்கின்ற பொழுது இலங்கை முன்னணியில் இருக்கின்றது.

ஆனால் இரவோடிரவாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்துவது என்பது மக்கள் வாழ்வதற்கு கஷ்டமான மிக நெருக்கடியான நிலையை ஏற்படுத்தும்.

அரசு சரியாக செயல்படவில்லை என்பதை ஜனாதிபதி அவர்களே கூறுகின்றார். வினைத்திறனோடு செயற்படுவோம் என கூறுகின்றார் பார்ப்போம் அவ்வாறு நடக்கும் என நான் நம்பவில்லை. அரசாங்கத்திற்கான எதிர்ப்புக்கள் கூடிக்கொண்டே போகின்றன. இது மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு, பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் சாதகமான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை நாங்கள் வழங்குவோம்.

இந்த அரசாங்கம் வந்த பொழுதே எமக்குத் தெரியும் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சாதகமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க மாட்டார்கள் என தெரியும். ஆனால் குறைந்தது சிறைக்கைதிகளையாவது விடுவிக்கமுடியும். அதற்கான நடவடிக்கை எடுப்பேன் என்று ஐ.நாவில் ஜனாதிபதி கூறினார். அந்த நடவடிக்கைகளை துரிதமாக செய்ய வேண்டும் அனைவரையும் விடுவிப்பதற்கான முழுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். – என்றார்.

# தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் கனடா குரல் கொடுக்க வேண்டும்!

## யாழ். முதல்வர் வேண்டுகோள்



தமிழ் மக்களுக்காக கனடா அரசு தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்னனை யாழ். மாநகர சபையில் அமைந்துள்ள முதல்வர் அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

தமிழ் மக்கள் யுத்தத்தால் நீண்டகால பாதிப்புகளை உணர்ந்த நிலையில் அவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளை கனடா தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு தொடர்பான விசாரணைகளுக்கும் கனடா அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

கனடா நாட்டின் றெறண்டோ மாநகர சபைக்கும் யாழ் மாநகர சபைக்கும் இடையிலான இரு தரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட நிலையில் அதன் செயற்பாடுகள் பாரியளவில் நடைபெறவில்லை.

ஆகவே கனடா அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் செயற்படும் நிலையில் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்காக கனடா அரசாங்கம் தமது பங்களிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் கோரிக்கை விடுத்தார்.

இச்சந்திப்பில் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# இந்திய இராணுவப் படைகளின் பிரதானி இலங்கை வந்தடைந்தார்



ஐந்து நாள்கள் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு இந்திய இராணுவப் படைகளின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே இலங்கைக்கு வந்துள்ளார்.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் அழைப்பின் பேரில் ஐந்து பேர் கொண்ட குழு நேற்று (செவ்வாய்க்கிழமை) இலங்கை வந்துள்ளது.

ஜெனரல் மனோஜ் முகுந்த் நரவனே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோரை சந்திக்க உள்ளார்.

அத்துடன், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, கடற்படை மற்றும் வான் படைத் தளபதிகளையும் இந்திய இராணுவப் படைகளின் பிரதானி சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய வயது 60 ஆக உயர்வு

## அரசாங்கம் அறிவிப்பு

தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய வயது 60 ஆக உயர்த்தப்படும் என அரசாங்கம் நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் கூட்டத்தில் அமைச்சரவை பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கான வயது வரம்பில் திருத்தம் செய்வதற்கான சட்டமூலத்தை தயாரிக்க கடந்த 23.03.2021ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான வணிகத் துறையைப் பாதிக்கும் கொள்கை அல்லது சட்ட விடயங்கள் தொடர்பாக ஆய்வுக் குழுவில் தொடர்புடைய அனைத்து தரப்பினரின் பங்கேற்புடனும் இந்த சட்டமூலம் மேலும் விவாதிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கமைய, முன்மொழியப்பட்ட சட்டத்தின் நடைமுறைத் திகதியில் 52 வயதை எட்டாத ஊழியர்களுக்கு ஓய்வூதிய வயதை 60 வயது வரை நீடிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் குறைந்தபட்ச வயதில் திருத்தம் மேற்கொள்ளும் சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சமூகத் தொண்டர் அமரர் யோகநாதன் பிறந்த தினத்தில் மரம் நடும் இயக்கம்



யாழ்ப்பாணம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக இயக்குநராக நீண்டகாலம் பணியாற்றிய சமூகத்தொண்டர் அமரர் சொக்கநாதன் யோகநாதனின் பிறந்ததினத்தை முன்னிட்டு, கடந்த ஞாயிற்றுக்கிழமை வடபகுதியில் மரம் நடும் இயக்கம் முன்னெடுக்கப்பட்டது.

சொக்கநாதன் யோகநாதன் கடந்த ஜூலை மாதம் 05 ஆம் திகதி தமது 73 ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் கொவிட் தொற்றால் மறைந்தார்.

அமரர் யோகநாதன், யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா முதலான மாவட்டங்களில் வதியும் போரால் பாதிப்புற்ற ஏழைத்தமிழ் மாணவர்களுக்கு உதவும் வெளிநாடுகளிலிருந்து இயங்கும் தன்னார்வத் தொண்டர் அமைப்புகளின் தொடர்பாளராகவும் அர்ப்பணிப்புடன் இயங்கியவர்.

ஆஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் உட்பட பல வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் ஆதரவுடன் குறிப்பிட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக ஏழைத்தமிழ் மாணவர்களின் குடும்பங்களுக்கு கொவிட் நெருக்கடி காலத்தில் உலர் உணவுப்பொதிகளை வழங்குவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.

அன்னார் மறைந்து மூன்று மாதங்கள் நிறைவுற்றிருக்கும் இக்காலப்பகுதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, யாழ். மாவட்டத்தில் காங்கேசன்துறை, தையிட்டி பிரதேசங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு மீள் குடியேற்றப்பிரதேசத்திலும் கிராமசேவகர் பிரிவுகளில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் தினேஷ், நிர்வாகப்பணியாளர் செல்வி காயத்திரி தங்கராசா ஆகியோர் முன்னின்று பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினர்.

இந்த மரம் நடும் இயக்கம் தொடர்ந்து ஒரு வார காலத்துக்கு நடைபெறவுள்ளது.

# பொருள்கள் விலை எகிறியமை; உடன் தீர்வைக் காணுங்கள்!

## ஜனாதிபதி கோட்டா பணிப்பு



அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுக்குத் தீர்வு காணுமாறு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

அத்தோடு, குடிமக்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அடிப்படை பொருள்களின் விலையேற்றம் தொடர்பாகப் பரவலாக விவாதிக்கப்பட்டதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போதே, நிதியமைச்சர் பஸில் ராஜபய்க்ஷவுக்கு ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ மேற்குறிப்பிட்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் பொதுமக்கள் அதிக வாழ்க்கைச் செலவைச் சுமப்பதால் அனைத்து மாநிலச் செலவுகளையும் குறைக்குமாறு ஜனாதிபதி இதன்போது அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விடயத்தில் அமைச்சர் பஸிலுக்கு எந்த மாற்றுவழியையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய புதிய முறைகளைக் கொண்டு வாருங்கள் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

உயரும் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிரச்சினையைப் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வையும் விரிவான விளக்கத்தை அளிக்கவும் ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவுறுத்தினார்.

## இணையத்தள பாதுகாப்பு குறித்து இரு சட்டமூலங்கள்

இணையத்தள பாதுகாப்பு தொடர்பில் இரண்டு சட்டமூலங்களைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலத்திரனியல் தொடர்பாடல்களின் வளர்ச்சியால் தீவிரவாதக் குழுக்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் பயங்கரவாத செயற்பாடுகள், திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் சமூக விரோதச் செயல்களுக்காக இணையவெளி மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கு தூண்டப்பட்டுள்ளனர்.

இணையவெளி மூலம் மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் தொடர்பாடல்கள் தேசிய பாதுகாப்புக்கு நேரடி விளைவுகளை ஏற்படுத்தும் காரணி எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய பிரதிநிதித்துவ நிறுவனங்கள் தற்போது தத்தமது நிறுவன மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இணையத்தள பாதுகாப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மேலும் முறையான வகையிலும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் தேவையான ஏற்பாடுகளை உள்வாங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக புதிய சட்டமொன்றை வகுப்பதற்கான தேவையுள்ளது.

இணையத்தள பாதுகாப்பு மற்றும் அதற்கான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவது, தொழிநுட்ப அமைச்சின் விடயத்தலைப்பின் கீழ் காணப்படுகின்றது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, தொழிநுட்ப அமைச்சு மற்றும் ஏற்புடைய ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னர், பாதுகாப்புத் துறையின் இணையத்தள பாதுகாப்பின் ஏற்பாடுகள் உள்ளடங்கலாக அதன் (அ) பகுதியின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு வேறான தொரு சட்டமூலம் தயாரிப்பது உகந்ததெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்புடைய விடயங்கள் தவிர்ந்த தேசிய தகவல்கள் மற்றும் இணையத்தள பாதுகாப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டமொன்றை தயாரித்தல், குறித்த பணிகளுக்காக ஏனைய பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்காக ஏற்பாடுகளை வகுத்தல், நாட்டில் தீர்மானம் மிக்க முக்கியமான தகவல்கள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை அடையாளங் காணல், இணையத்தள பாதுகாப்புக்கு ஏற்படும் ஆபத்து நேர்வுகளுடன் கூடிய செயற்பாடுகளைத் தடுத்தல் மற்றும் நாட்டில் முறையான இணையத்தள பாதுகாப்புச் சூழலை உருவாக்குதல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழிநுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையை கருத்தில் கொண்டு குறித்த இரண்டு சட்டமூலங்களைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 60 வயதுக்கு மேல் பூஸ்டர் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு அளவுகளையும் பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது டோஸ் அல்லது பூஸ்டர் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது.

சினோபோர்ம் மற்றும் சினோவக் தடுப்பூசிகளைப் பெற்றவர்களுக்கு பைஸர் அல்லது மொடர்னா போன்ற தடுப்பூசிகளில் இருந்து மூன்றாவது டோஸ் வழங்குமாறு நிபுணர் ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது.

சினோபோர்ம் மற்றும் சினோவக் தடுப்பூசிகள் செயலற்ற வைரஸால் தயாரிக்கப்படுகின்ற அதே நேரத்தில் பைஸர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகள் வைரஸின் குரோமோசோம் மாதிரியைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படுகின்றன.

டி.என்.ஏ. அல்லது ஆர்.என்.ஏ. போன்ற ஒரு குரோமோசோம் தடுப்பூசியை, செயலற்ற வைரஸால் தயாரிக்கப்படும் தடுப்பூசியை செலுத்தியவர்களுக்கு வழங்குவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க முடியும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், குறைபாடுள்ளவர்களுக்கு மூன்றாவது டோஸ் கொரோனாத் தடுப்பூசியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் அழைப்பு விடுத்துள்ளது.

தடுப்பூசி போட்டாலும் கூட, டெல்டா மாறுபாடு போன்ற வகைகளின் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது என்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

## வெள்ளைப்பூண்டு மோசடி சம்பவம்; சதொச அதிகாரிகள் விளக்கமறியலில்!

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட சதொச அதிகாரிகள் நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த நால்வரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த 4 சதொச அதிகாரிகள் திங்கட்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கொள்வனவு தொடர்பான உதவி மேலாளர், சிரேஷ்ட விநியோக முகாமையாளர், விநியோக முகாமையாளர் மற்றும் வெலிசர மொத்த விற்பனை முகாமையாளர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பாக வாக்குமூலங்களை வழங்குவதற்காக சந்தேகநபர்கள் வந்திருந்த போது இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 6 ஆண்டுகளுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட தாய், மகனுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலிகள்

வவுனியாவில் 6 ஆண்டுகளுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட தாய் மற்றும் அவரது மகனுக்கு உறவினர்களால் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 2015.08.09 ஆம் திகதியன்று யாழில் உள்ள தனது தாயார் வீட்டிலிருந்து வவுனியாவில் உள்ள கணவரது வீட்டுக்குச் சென்ற சயிந்திகா எனும் பெண்ணும் அவரது மகனான பொபிணனும் அன்றைய தினமே படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த பொலிஸார் 6 வருடங்கள் கழித்து குறித்த பெண்ணின் கணவரை கடந்த ஒகஸ்ட் 7 ஆம் திகதி கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவனிடம் வவுனியா பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, தனது மனைவியையும் தனது மகனையும் தானே கொலை செய்தேன் என அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் படுகொலை செய்யப்பட்ட தாய் மற்றும் மகனின் ஆத்மா சாந்தியடைய சயிந்திகாவின் பெற்றோரும் உறவினர்களும் பால்வார்த்து கண்ணீர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

வவுனியாவிலுள்ள முருகனூர் பகுதியிலேயே இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

## கூரிய ஆயுதத்தினால் தாக்கி 22 வயது இளைஞன் கொலை

கலேவெல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கலவெள பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் மற்றைய நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

22 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாணங்களுக்கு இடையில் பயணிக்கும் பஸ்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள்

### திலும் அமுனுகம எச்சரிக்கை



மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

வைத்தியசாலை ஊழியர்களின் போக்குவரத்துக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களைத் தவறாகப் பயன்படுத்தி இவ்வாறு சிலர் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர் என அவர் சாடியுள்ளார்.

பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தாலும் வைத்தியசாலை ஊழியர்களுக்காக மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்காக 17 பஸ்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அருவியாற்றில் மணல் அள்ளுவதற்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்கு

## சுமந்திரன், சயந்தன் முன்னிலையாகி வாதம்



மன்னார் அருவியாறுப் பகுதியில் மணல் அகழ்வதற்குத் தடை விதிக்குமாறு கோரிமன்னார் நீதிவான் சிவகுமார் முன்னிலையில் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் சார்பில்தாக்கல் செய்யப்பட்ட மனுவைவிசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சம்பந்தப்பட்ட எதிர்த் தரப்புகளை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் தருமாறு உத்தரவிட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி நேற்று மன்னார் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் கேசவன் சயந்தன், சிராய்வா ஆகியோர் சகிதம் முன்னிலையாகி இந்த வழக்கை சமர்ப்பித்தனர்.

அருவியாறு பரிகாறக்கண்டல், ஆத்தி மோட்டை, பன்னவெட்டுவான், அடியாச்சிக் குளம் பகுதிகளில் வகை தொகையின்றி மணல் அள்ளப்படுவதாக பிரதேச சபைத் தலைவர் தி.பரஞ்சோதி தமது சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கமத்தொழில் திணைக்களம் இந்த ஆற்றுப் படுக்கையில் மணல் அள்ளக் கூடாது என உத்தரவிட்டுள்ளதாக அறிகின்றோம்.

புவிசரிதவியல். அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகம் மணல் அள்ளுவதற்கு வழங்கிய அனுமதி கூட கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது.ஆனால் அதன் பின்னரும் மணல் அள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் பெரும் சூழலியல் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக வழக்காளிகள் தரப்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

விடயத்தை பரிசீலித்த நீதிவான் எதிராளிகளை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றில் பிரசன்னமாகி விளக்கமளிக்கு மாறு உத்தரவிட்டார்.

### இந்தியாவிலிருந்து தனி விமானத்தில்

# இலங்கை வந்தடைந்த சுப்ரமணியன் சுவாமி



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன் சுவாமி, தனி விமானத்தில் நேற்று காலை கொழும்பை வந்தடைந்தார்.

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோர் சுப்ரமணியன் சுவாமியை வரவேற்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற நவராத்திரி விழாவில் சுப்ரமணியன் சுவாமி கலந்துகொண்டார்.

அத்துடன், இலங்கை இராணுவத்தின் 72ஆவதுநிறைவையொட்டிநடத்தப்படும் இராணுவக் கருத்தரங்கொன்றிலும் அவர் உரையாற்றவுள்ளார்.

---

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபைகள் முறைமையானது இலங்கையால் கடந்த 3 வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது. இலங்கை அரசானது தேர்தலை நடாத்துவதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்காமல், பதிலாக சபைகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை அகற்றுவதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய பிராந்தியத்தை தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது.

குறித்த உடன்படிக்கையின் மூலமாகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை இலங்கையானது எப்போதுமே முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பதுடன் தற்போது அதனை மேலும் பலமிழக்கச் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளது.

இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் நிரந்தர அமைதியை அடைவதற்கும் அதேசமயம் எமது பிராந்தியத்தில் சுதந்திரத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உதவுவதன் பொருட்டு தமிழ் மக்கள் உலகிலுள்ள அதிகாரம் மிகுந்த நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிடம் அழைப்பு விடுக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான கடந்த கால வன்முறை வடிவங்கள் மீள இடம்பெறாமல் இருப்பதற்கு உத்தரவாதம் அளிக்க வல்ல நிரந்தர அரசியல் தீர்வை ஜனநாயக ரீதியில் நிலைநாட்டுவதற்காகவும், அவர்களுக்கான ஈடுசெய் நீதியை வழங்குவதன் பொருட்டும் அவர்களை அடக்கு முறையிலிருந்தும் ஆக்கிரமிப்பிலிருந்தும் விடுவிப்பதன் பொருட்டும் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மக்களுக்காக ஐ.நாவால் கண்காணிக்கப்படுகின்ற குவாட் நாடுகளான ஆஸ்திரேலியா, இந்தியா, யப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்றனவற்றால் நடத்தப்படுகின்றதுமான பொதுஜன வாக்கெடுப்பை ஒருங்கிணைப்பதற்காக உடனடியானதும் அவசரமானதுமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இந்தியாவிடம் கோருகின்றேன் - என்றார்.

## கிழக்கில் முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் பிள்ளையான் கட்சியின் பொதுச்செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தனிடம் வினவியபோது,

கிழக்கு மாகாண மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் கட்சி எடுக்கும் தீர்மானத்துக்கு பிள்ளையான் ஒத்திசைவார் என்று குறிப்பிட்டார்.

அதாவது கட்சி பச்சைக்கொடி காட்டினால் பிள்ளையான் களமிறங்குவார் என்பதே அவரின் கருத்தின் சுருக்கம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிள்ளையானின் கட்சி தனித்துப் போட்டியிட்டது. எனவே, பிள்ளையான் பதவி துறந்தாலும் அவரின் கட்சியைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்றம் செல்லக்கூடும்.

இதேவேளை, 2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் 10 ஆயிரத்து 301 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 90 ஆயிரத்து 800 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வி.மணிவண்ணனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மாநகர சபையில் நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர மேயரால் தூதுவருக்கு நினைவுப் பரிசு வழங்கி வைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலனும் கலந்துகொண்டார்.

இதேவேளை, கனடாத் தூதுவர் டேவிட் மக்கினோன் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்தார்.

தற்போதைய வைத்திய சேவைகள் மற்றும் கொரோனா தொற்று நிலைமைகள் பற்றி யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியிடம் கேட்டு அறிந்து கொண்ட அவர், யாழ். போதனா வைத்தியசாலையின் அருங்காட்சியகக் கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டார்.

## அலரி மாளிகையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமரின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக நேற்றுக்காலை இலங்கை வந்த சுப்பிரமணியன் சுவாமியை இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக மற்றும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிலையில், நேற்று மாலை அலரி மாளிகையில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் அவர் கலந்துகொண்டார்.

இதேவேளை, இலங்கை இராணுவத்தின் 72ஆவது நிறைவையொட்டி நடத்தப்படும் இராணுவக் கருத்தரங்கிலும் அவர் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டா ஆட்சி தொடர்ந்தால் பட்டினியால் மக்கள் மடிவர்!

## ஐ.தே.க. பகிரங்க எச்சரிக்கை



இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஆட்சி தொடர்ந்தால் பட்டினியால் மக்கள் செத்து மடிவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலி - ஹக்மீமன பகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலி மாவட்டத்தில் தேயிலைத் தொழிற்துறைகளில் ஈடுபடுவோர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். உரத்தட்டுப்பாடு காரணமாக தேயிலை செய்கை வழமைக்குத் திரும்ப இன்னும் ஒன்றரை ஆண்டுகள் தேவைப்படும்.

உலகில் தரமான உரத்தை 350 ரூபாவுக்கு வழங்க முடியாது. கோட்டாபய அரசு ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித் திருந்தது. தரம் குறைந்த உர வகைகளைப் பயன்படுத்துவதனால் மண்வளம் இழக்கும்.

இலங்கையில் அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை மக்களுக்கு ஏற்படும்.

தற்போதைய அரசு எவ்வித நோக்கமும், திட்டமும் இன்றி நாட்டை ஆட்சி செய்வதனால் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் பட்டினியால் மக்கள் செத்து மடிவார்கள் - என்றார்.

## லா பாமா...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்புக்கு முன்னர் 4.2 அளவில் புவி நடுக்கம் ஏற்பட்டதன் பின்னர், கறுப்பு வெள்ளை நிலக்கரிப் புகை வளிமண்டலத்தை மாசுபடுத்தியது. அத்துடன் வெடிப்பின் போது 5,000 10,500 தொன்கள் அளவான சல்பர் டி ஒக்சைட் படிவுகள் நாளொன்றுக்கு உற்பத்தியாகியன. இவ்வாயு காரணமாக தோல், கண்கள், மூக்கு, தொண்டை ஆகிய உறுப்புக்க ளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். வளிமாசடைதலின் காரணமாக அமில மழை ஏற் படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இறுதியான மதிப்பீட்டின்படி, வெடிப்பினால் 2,50,000 தொன் சல்பர் டி ஒக்சைட் ($SO_2$) வெளியேற்றப்பட்டுள்ளது. இவ் வாயுக்கள் கனேரித் தீவுகளின் மேலாகப் பரந்து வட ஆபிரிக்கா, மத்தியதரைப் பகுதி, அத்திலாந்திக் பகுதி ஆகியவற்றின் மேலாக நகர்ந்து கரீபியனையும் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆறு போன்று லாவாக் குழம்பு அத்திலாந்திக் சமுத்திரத்தைச் சென்றடைவதனால் அங்கு நீருடன் கலக்கும் போது வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. இதன்போது உருவாக்கப்படும் நச்சு வாயு கொண்ட புகை மூலம் முகில்கள் உருவாகும். எரிமலை வெடிப்பினால் லாவாக் குழம்பு படிப்படியாக சமுத்திரத்திற்குள் வெளித்தள்ளப்படுவதனால், 50 ஏக்கர் அளவில் புதிய தரைப் பகுதி உருவாகியுள்ளது.

லா பாமா பல்கலைக்கழக உயிர்ப்பல்வகைமை பற்றிய ஆய்வாளர் 'பெர்னான்டோ ரூயா' என்பவர் குறிப்பிடும் போது லாவாப் பாறைக் குழம்பு, பாறைத் தன்மையான தட்டை நிலத்தினை உருவாக்குவதினால், எதிர்காலத்தில் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்களில் கடல்சார் இனங்கள் பலவற்றிற்கு இதுவொரு கீழ்ப் படையாக விளங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தில் கலப்பதனால் ஏற்படக் போகும் தாக்கங்களை உணர்வதற்கு சிறிதுகாலம் செல்லும். இயற்கையின் சீற்றம் மனிதனின் நிலைபேண் வாழ்வுக்கு எப்பொழுதும் தடையாகவே இருந்து வருகின்றது என்பதற்கு இந்த எரிமலை வெடிப்பு ஓர் உதாரணமாகும்.

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவ்வித தொடர்பும் கிடையாது. தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசு உள்ளது.

தேர்தலை நடத்தக்கூடிய சூழல் உருவாகும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் நடத்தப்படும். நாமும் தயாராகவே இருக்கின்றோம் - என்றார்.